[12th September 1959

SRI P. G. MANICKAM : இந்த பண்ணைக்கு இந்தியா கவர்மெண்ட்டினிடமிருந்து எவ்வளவு தொகை வந்திருக்கிறது ? அத்துடன் அயல் நாட்டிலிருந்து ஏதாவது உதவி கேட்டு அது கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி இருந்தால் அப்படி அயல் நாட்டிலிருந்து வந்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நியூ ஜிலண்ட் அரசாங்கம் 29 லட்சம் ரூபாய் மத்திய அரசாங்கத்திற்கு உதவி அளித்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இந்த திட்டத்திற்கு கடனாக 123 லட்சம் ரூபாய் வந்திருக்கிறது. இந்த அரசாங்கமும் அதை கடனாகப் பெற்றிருக்கிறது.

SRI K. VINAYAKAM : My Friend is abdicating his right to put questions in my favour.

MR. SPEAKER : He has no right.

Risk allowance to Nurses

* 378 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether risk allowance is paid to Nurses in Mental Hospital, Madras; and

(*b*) whether there is any proposal to extend the same facility to nurses in the Tuberculosis Hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

SRI N. K. PALANISAMI : மெண்டல் ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய நர்சுகளுக்கு எந்த அளவு ரிஸ்க் இருக்கிறதோ அம்மாதிரி டி.பி. ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய நர்சுகளுக்கும் ரிஸ்க் இருக்கிறது. அதனால் அங்கேயும் இந்த அலவன்சை விஸ்திரிக்கக் கூடாதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த அளவுக்கு இல்லை. அந்த ஆஸ்பத்திரியில் உடனடியாக ரிஸ்க் இருக்கிறது. மற்ற ஆஸ்பத்திரிகளில் டிலேட் ரிஸ்க் இருக்கிறது. அதனால் தான் அங்கே அலவன்சு கொடுக்கப்படுகிறது.

Collection of sales tax.

* 379 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 10—3—59-ல் 674-ம் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி வடஆற்காடு மாவட்டத்தில் 1956-57, 1958-59-ல் முறையே விற்பனை வரியின் மூலம் எதிர்பார்த்ததில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக வசூலாகாமல் இருப்பதற்கு காரணமென்ன ?

(ஆ) வசூலாக வேண்டிய தொகையை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

12th September 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) In the North Arcot district, under sales tax, the percentage of balance to demend was 50 as on 31st March 1957 and 44 as on 31st March 1959. The bulk of the arrears in each of these two years is due from the tanners and dealers in hides and skins. The tanners and dealers in hides and skins have been granted concessions in the matter of paying the arrears of sales tax due by them in view of the slump in their trade and the consequent difficulties caused to them. They have been permitted to pay in 72 monthly instalments the arrears due from them for the years prior to 1953–54 and in six quarterly instalments the arrears of tax due by them for the years 1953–54 to 1956–57.

(b) Wherever the arrears are not covered by appeals or revisions or by the concessions granted by the Government, action has been taken to collect the arrears as provided for under the Act.

Lock-outs and strikes

* 380 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the names of companies which have declared lock-outs in the months of April and May 1959 in (i) the City of Madras; (ii) Coimbatore; and (iii) Madurai;

(b) the steps taken by the Government to lift the said lock-outs;

(c) the names of companies whose workers had struck work in the above places during the same period; and

(d) the steps taken by the Government to enable the workers to resume work?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (d) A statement [a] is placed on the table of the House.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த லாக் அவுட்களைச் செய்த முதலாளிகள் அதை மீட்க முன் வராவிட்டால் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுப்பார்கள்? லாக் அவுட் செய்து அவைகளை இன்னும் மீட்காத முதலாளிகள் எத்தனை பேர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : லாக் அவுட் செய்வதை இண்டஸ்ட்ரியல் டிஸ்பூட் ஆக்ட் பிரகாரம் கோர்ட்டுக்கு அனுப்ப முடியும். அவசியமானால் அந்த லாக் அவுட்டை எடுத்து விட வேண்டும் என்று சொல்லி சட்டப்படி ஒரு உத்தரவு போடலாம். அவ்வாறு எத்தனை பேர்கள் இப்பொழுது இருக்கிறார்கள் என்பதை நான் கொடுத்த லிஸ்டிலுள்ள கணக்கை போட்டுப் பார்த்தால் தெரியும்.

Textile mills

* 381 MR. SPEAKER ; கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. ராமச்சந்திரன் இடத்தில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சட்டசபை விவாத வெளியீட்டில் அச்சடிக்கப்படும்.

---

a Printed as Appendix III on pages 614–616 infra.